ப்ரஹ்மவித்யா.

பத்திரிகை கிரயம்
1வருஷம் 2—12—0
6 மாசம் 1—8—0
3 மாசம் 0—14—0
1காபி 0—2—6
இலங்கைக்கு,
3—8—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை.
மாதம்
இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்

பத்திரிகைகிரயத்தை மணிபார்டராகவாவது, ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்குஅனுப்புதல்வேண்டும்.

[illegible]

௩-ம் புத்தகம். } சிதம்பரம்:— சர்வதாரி௵ ஆடிமீ ௧௮ உக்கு ௧௮௮௮ ௵ ஜுலைமீ ௩௧ உ செவ்வாய்க்கிழமை. { இலக்கம்-௫.

விக்ரஹாராதநம்.

[ஸம்ஸ்க்ருதம்]

[illegible]

விக்கிரகாராதனம்.

(முன்தொடர்ச்சி)

"வீர:" வீரன் என்னுஞ் சொல்லிற்குப்பொருள் நாராயணன்; அவர் லீலையாய் வட்டகைமுதலிய பாத்திரங்களைக்கொண்டு செய்யும் பூஜையை எய்து தொண்டர்களுக்கருள்புரிய சத்தவத்துக்களில் எழுந்தருளுகின்றாரென்பது துணிபு. கல்லென்பது பொன் முதலியவற்றிற்குக் குறிப்பே. இஃது தங்களமே கொள்ளற்பாலது. ஏனெனின், அடுத்தமந்திரமிவ்விதமாகவேயிருக்கின்றது; [illegible] என்பது; இதன்பொருள். "[illegible]" பிங்கரூப: பொன்மேனியுடையவன்; '[illegible]' சுபர: நன்றாயெடுத்து ஆராதிக்கத்தக்கவன்; 'வயோ[illegible]' வயோதர: பக்ஷியை வாகனமாகக் கொண்டவன்; வீர:' வீர: முன்மந்திரத்திற் பொருள்கூறியபடி வீரனென்பவன் நாராயணனெனக்கொள்க. பரமாத்மோபநிஷத்தில் '[illegible]' என்று கூறப்படுமந்திரமும் விக்கிரகாராதனத்தை விளக்குகின்றது. ஏழாவது அநுவாகம் பத்தாவது மந்திரமாகிய "[illegible]" இம்மந்திரமும் மேற்கண்ட விக்கிரகவணக்கத்தையே எடுத்து விளக்குகின்றது இம்மந்திரத்திற்கும் சகலவேதங்களுக்கும் உரை

[illegible]

செய்ப பட்டபாஸ்கராசாரியர் எழுதிய சிற்றுரை இது:— "ராயாம், ராயாம் பொருட்களின் 'வஸதே', பதத்ரே "குறைவின்றுக் காப்பவனும் (அதாவது எளிய அடியார்களுக் "குச் செலவமளிப்பவனென்பதுகருத்து;) ரயிஸ்தவ்ய, ரயிமத் "ஸு பொருளுள்ளவர்களிடம் "ரயி" ரயிம் பொருளை "வர்ஷம்,, புஷ்டாம் பெருகியதாக "க்ருணோதே,, ஆ 'ததாத்ரே செய்பவனும் (செல்வவான்களான அடியார்களுக் "குச் செல்வத்தை விருத்திசெய்பவனென்பது கருத்து.) "ஸ "ஸுர்யாய,, கருத்தாய எல்லாவற்றிலு மேலானவனும் "வ "தே,, பத்ரே மங்களகரனுமாய பரமன்பொருட்டு (இச் "செய்கைகளை அர்ப்பணம் செய்வோமென்றுணர்க.) "ராயஃ,, "ராயஃ பொருளினும் "ஸ்ரேஷ்டம்,, ப்ரஹந்தம் பேற்பட்ட "வனும் (அதாவது பொருட்செல்வத்தினும் அத் திருவருட்செ "ல்வம் நிறைந்ததென்றும், இவ்விஷயாந்தரத்தினும் அப்பே "ரானந்தம்மிகச்சிறந்ததென்பதும் கருத்து.) "ராராஜிதம்,, "ராராஜிமந்தம் சர்வைசுவரியங்களுக்கிடமானவனும் "ரதயே,, ரதயே தொண்டர்களிக்கும் திருவாராதனத்தைப் "பெறுதலின் விருப்பத்தால் "பிம்பவந்தம்,, பிம்பவந்தம் "பிம்பத்திலெழுந்தருளியவனுமான (பிரதிட்டைமுதலியவற் "றுலெனவருவித்துக்கொள்க.) பரஞ்சுடரை "யஜஸ்வ,, யே "ஜந்து பூசைசெய்யுக.

இனி ஸ்ரீநிவாசதீக்ஷிதரென்னும் ஓர்மகான் மற்றோரிடத்தில் இதே மந்திரம் "ரதயேரந்தம்,, ரதயேரமந்தம் என்றுசிறிது மாறியிருப்பதாக எடுத்து அதற்கு "தம் தொண்டர்களுக்கு எவ்விதக்குறைவு வரினும் அக் குறைவுகளை அகற்றிக்காப்பவர் என்றும், "ரயிதா3ரயாதே" அழியாப்பொருளை அளிப்பவரென்றும் "ரயிஸ்தவ்ய வர்ஷம்" ரயிமத்ஸுபுஷ்டாம் புண்ணியசாலிகளிடம் அவரது அருட்பொருளைப் பெருக்குவாரென்றும், "ராராஜிமந்தம்" ராராஜிமந்தம் யாமுலகத்திற்கண்ட பொருளுக்கு வேறான் திருவருட்பொருட் பெருகியவரென்றும், "ரதயே" ரதயே தமதுலீலைகளை வெளியிட "பிம்பவந்தம்,, பிம்பவந்தம் கன்முதலியவற்றுல் செய்யப்பட்ட விக்கிரகங்களில் எழுந்தருளியவரென்றும், "ஸுர்யாய,, கருத்தாய எல்லாவற்றிற்கு மேலானவரென்றும் மற்றவை முன்போலும் எழுதிமுடித்திருக்கின்றார். இம்மந்திரம்போன்ற நூற்றைந்து மந்திரங்களடங்கிய இவ்வுபநிடதம், ஸ்ரீவைகாநசம் மந்திரப்பிரச்னத்தில் அடங்கியது. பிரதிட்டை முதலிய கருமங்களில் அடிக்கடி வுபயோகப்படுகின்றன. "அக்கினிப்பிரதிஷ்டாகாலத்தில், இவ்வுபநிடதமந்திரங்களால் ஹோமமுதலியவை" வைகாநசத்திலும் கர்மவிபாக முதலிய கிரந்தங்களிலுமிருக்கின்றன. இவ்வுபநிடதம் கல்பிதமோவெனச் சங்கித்தலும் சித்தியாது. இதில் கூறிய மந்திரங்களும் அதன் பொருள்களும் அநேக தர்ம சாஸ்திரங்களிலெடுத்துக் கூறியிருப்பதாலும், அவைகளைச் சிலவந்தணர்கள் கிரமாத்தியயனம் செ

[illegible]

...ய்து வருவதாலும் அஃது நம்பத்தக்கதே; தர்மசாத்திரங்களெல்லாம் சிதறுண்டு நிற்கும் பல வேதங்களை மூலமாய்க்கொண்டே வெளிவந்தனவென்பது ஆன்றோர்கருத்து; இசிலமூவர்கள் மூன்றுவிதமான் கொள்கைகளைக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களுள் பட்டபாஸகராசாரியா ரென்பவர் எககாலத்தும இவ்வுலகத்தார் கல்லாததும், தேவலோகத்தில்வழங்கிவருவதுமான வேதமே தர்மசாத்திரங்களுக்கு மூலமாயிருக்கலாமென்றார்; இவ்விதங் கூறல் யுக்திக் கொவ்வாதென்றும் "தர்மசாத்திரங்களின்" "மூலமாய் ஊகிக்கும் வேதங்கள் எழுத்"தெழுத்தாயாவது, அல்லது சொற்றொடராகவாவது ஊகித்த"ல்வேண்டும்; அவ்விதஞ்செய்தால் யாதொருவிதமு மறியாத "லோகாந்தர வேதங்களிலமையாது" என்றும் ஆபஸதம்பர்முதலிய பலமுனிவர்கள், தர்ம சாத்திரங்களுக்கு மூலமான வேதங்கள் சிலகாலம் படிக்கப்பட்டு பிற்காலத்தவரால விடப்பட்டிருக்கவேண்டுமென்றுங் கூறினர்; மற்றுஞ்சிலர் "சிலகால"ம்படிக்கப்பட்டு இடையில் விடப்பட்டிருக்குமேல், அவைகளை "சமஸத வேதங்களை யறிந்த வியாசர்முதலிய முனிவர்கள் தம"து சீடர்களாகிய வைசம்பாயினர் முதலியவர்களுக்குள் எவரு"க்கேனும் சொல்லிவைத்திருக்கலாம்; வியாசாசாரியரறிந்தே "தமது சீடர்களுக்குச் சிலவேதங்களைக்கலந்து ஓதிவைத்திருப் "பாரெனின், பதக்கிரமங்கள் தவாது சொற்றொடரும் பொ"ருட்டொடரும் இயைந்துநிற்கும்; வேதத்தில் இடையிற்பு"கலமையாது; ஆதலால், சிலகாலம் படிக்கப்பட்டு பின்னர் "விடப்பட்ட வேதங்களும் தர்மசாத்திரங்களுக்கு மூலமாதல் "கூடாது; இவ்விதஞ்சில வேதங்கள் முற்றிலும் விடுபட்டன "வாயொப்புக் குத் தக்ககாரணம் இல்லை" என்று ஆங்காங்கு "சிதருண்டு சிறுபான்மையோர் படித்துவரும் வேதங்களே த"ர்மசாத்திரங்களுக்கு மூலங்க" ளென்றார்கள்; இதுவே முடிவானசித்தாந்தம். ஆசையாற்றான் "வேதங்களினுட்கருத்தை "அறிவது அரிதாதலால், உண்மையையறிந்த அறிஞர்கள் அவ"ற்றினுட்பொருட்களைத் திரட்டி தர்ம சாத்திரமாக்கினார்கள்" என்றோர் முனிவர் கூற்று. அப்பரமாத்மியோபநிடதத்தில் ஏழாவது அனுவாகம் மூன்றாவது மந்திரம் "[illegible]" என்பது இம் மந்திரத்தை ஸ்ரீநிவாசதீக்ஷிதரென்பவர் "திருவேங்கடமுடையான் திருக்கோலத்தைக் குறிப்பதின் மந்திர" மென்றும் பட்டபாஸ்கராசாரியார் பொதுவாய் விக்கிரகாராதனத்தைக் குறிக்கிறதென்றும் முடித்திருக்கின்றார்; விரிக்கிற்பெருகும்; "[illegible]" என்று பற்பல மந்திரங்கள் அவ்வுபநிடதங்களிற் காணலாம். இனி ஹம்ஸோபநிடதத்தில் துறவிகளின் தர்மத்தை எடுத்துரைக்கப்புகுந்தவிடத்து நாரதனுக்கும் பிரமதேவனுக்கும் நடந்த ஓர்சம்வாதத்தில் பிரமத்தையடைய விரும்பு வனுக்கு யதி என்று பெயரிட்டு அவன் இவ்வுலகைத் துறந்த பிறகு நாராயணமூர்த்தியினை ஓர் கிரியை ஓதி, திவ்யம், சைத்தம், சுவியத்த முதலிய மூர்த்திகளில் ஆராதனஞ் செய்யும்படி விதித்திருக்கிறார்; பகவத்சா

[illegible]

த்திரத்தில் "தேவர்களமைத்த மூர்த்தி திவ்வியமென்றும் ரிஷிகளமைத்த மூர்த்தி சைத்தமென்றும் தொண்டர்களுக்கென பகவான் தானே அவதரித்தவிடத்து, சுவ்விடத்த மூர்த்தியென்றும் விவகரிக்கப்படுவார்" என்றிருக்கிறது; வேதத்தில் "ஐந்து ரூபமாயுள்ளவர் கடவுளெனச் சொல்லியிருத்தலால், பரம், வியூகம், விபவம், அந்தரியாமி, அர்ச்சை என்று ஐந்துருபம் அவருக்கமைந்ததே. "[illegible]———— [illegible]" என்கிறமந்திரம் மூர்த்திகளுக்குநிவேதனஞ் செய்தே புசிக்கப்பாலதென்று நாட்டுகின்றது. இவ்வேதவாக்கியத்திற்கு இதேபொருளென்று பிருகு மகரிஷி "[illegible] ———— [illegible]" என்கிற சுலோகத்தால் வெளியிட்டிருக்கிறார். அன்றியும், யஜுர்வேதத்தில் ஆருணத்தில் "[illegible]" என்று தொடங்கிய மந்திரம் ஸ்ரீமகாதேவன், ஸ்ரீவாசுதேவன் இவர்களுடைய மூர்த்திகளிற் செய்த அபராதத்தைப்பற்றி எடுத்துரைக்கின்றது. அவ்விடமுள்ள "[illegible]" என்னுஞ்சொல்லிற்கு அவமானமென்றும் பொருள். தேவதைகளை அவமதித்தலென்பது பிரதிமைகளிற்றானே கூடுமேயன்றி, பற்ற எமது ஐம்புலன்களுக்கு எட்டாத உருவத்திற் கூடாதென்க. இமமந்திரம் பிரதிமைகளைத்தான் குறிக்குமென்பது யாதுடற்றியோவெனின் இதற்கு ஓமத்தில் விநியோகம் செய்தவுடன் அடுத்தவுபஸ்தானமந்திரத்தில் "[illegible]" கண்ணால் தேவதைகளிடம் யாம்செய்த அபராதத்தை அக்கினிபகவான் எமக்குநீக்கி அருள்புரிவாராகவென்றுபொருள்பெறுதலாலும் உருவமற்றதேவதைகளிடம் கண்ணால் அபராதம்செய்தல்கூடாமையாதலாலும் அங்ஙனமுன்மந்திரத்தில் பொருள்கூறலாயிற்றென்க. அதுகொண்டே வராகபுராணம் 84 வது அத்தியாயத்தில், பிப்பரூபியான பகவத் சந்நிதானத்தில் நடக்கும்பற்பல அபராதங்களைப்பற்றியும் அவைகளுக்குச்செய்யவேண்டியபிராயச்சித்தங்களையும் விரிவாய்கூறியதைகாண்க. ஆதலால், ஒவ்வொரு மந்திரங்களுக்கு முன் பின் மந்திரத் தொடர்புகளுடன் முறணுவழி பொருள்படுத்தவேண்டுமேயன்றி வேறுவழிகோடல் எவ்வாற்றானுமமையாதென்க. அதுகொண்டே முன்னோர்கள் "தர்மத்தையறிவதில் முதற் பிரமாணம் வேதமும், இரண்டாவது தர்மசாத்திரம் மூன்றாவது லோகாநுஷ்டானம், இனி வேத சாத்திரங்களிற கண்ட விதிவழுவாத முன்னோராசாரம், இவைகளை நன்குணர்ந்தவனே தர்மங்களை அறிவான்" என்றார்கள். இப்பெரியோரெழுதிய வழியையனுசரித்தே இவ்விக்கிர காராதனவிஷயத்தில், முன் வேதங்களையும் பின் தர்மசாத்திரங்களையுமெடுத்தோதினனென்க. இவ்விஷயத்தில் யாமறியாத வேதங்களும் பல விருக்கலாம். இல்லாமலா சுருதி, ஸ்மிருதி, இதிகாசம், கிருஹ்யசூத்திரம் முதலியவற்றை நன்கு கற்றுணர்ந்த நம் முன்னோர்கள் இப்பிம்பாராதனத்தைக் கைக்கொள்வார்கள்? அவர்களுக்கு மிக்க சாபமிருந்தும், அதிசப்டணச்சிவிருந்தும் அவைகளைக்கைகொள்வதற்குக்காரணமில்லாமலிருத்தலமையுமோ? ஸ்மிருதிக

[illegible]

ன், புராணங்கள் இவைகளை எடுத்துக்காட்டுவோம். "இதிகாசங்களாலும் புராணங்களாலும் வேதங்களைப் பொருள்படுத்து. சற்றறிவுள்ளவனைக் கண்டு நம்மை எப்பொருட்படுத்துவரோவென்று வேதம் அஞ்சுகிறது" என்ற வசனமிருத்தலால் வேதங்களைப் பொருட்படுத்த ஸ்மிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள் முதலியவை முக்கியகருவிகள்; இனி ஸ்மிருதிகளை உதாகரிப்பாம். "தேவதைகள், இருடிகள், மானிடர்கள், பிதிர்க்கள் கிரகத்திலுள்ள தேவதைகள் இவைகளைப் பூசித்தே தாம் அன்னம் அருந்தல்வேண்டும். தமக்கென அன்னத்தை பாகம் செய்பவன் பாபத்தையடைவான்" என்று மனு எழுதியிருக்கிறார்; இதற்கு உரை எழுதியவர் "முதலில் தேவதைகளைப் பூசித்து" என்பதால் பூதயஞ்ஞமுதலியவற்றைக் கொள்க" என்றும் "கிரகத்திலுள்ள தேவதைகளை என்பதால் வாசுதேவன் முதலிய தேவதைகளின் பிரதிபிம்பங்களைக் கொள்க" என்று முடித்திருக்கிறார். அம்மனுவே நித்திய தருமங்களைக் கூறுமிடத்து "ஒவ்வொருதினமும் ஸ்நானஞ்செய்து சுசியாய் தேவ ரிஷி பிதிர்க்களுக்கு தர்ப்பணம்செய்து தேவதைகளைப்பூசித்தல்வேண்டும்" என்று எழுதியிருக்கிறார்; இதனால் விக்கிரகாராதனம் வைதிகமென்றே ஏற்படுகின்றது. மனு எழுதிய தர்மங்களெல்லாம் வைதிகமென்றே முன்னோர் துணிபு. "எவ்வருணச்சிரமங்களுக்கு மனு எவ்வித மனுதர்மத்தை எடுத்துரைத்திருக்கின்றாரோ, அவை அங்ஙனமே வேதங்களிலுள. அவ்வேதங்களை முற்றிலுமறிந்தவராவரோ" என்றும் "தமது ஞானக்கண்ணால் சமஸ்த வேதங்களையும் கற்றுணர்ந்து, வேதங்களிற் சொன்ன தர்மங்களை மனு எடுத்துரைத்தபடி ஒவ்வொருவரும் அனுட்டித்தல்வேண்டும்" என்றும் விருத்தமனு எடுத்துரைத்தார். "வேதாந்தங்களையறிந்த பிராமணர்களாலும், வைகானச சூத்திரத்தைக் கைக்கொண்டவர்களாலும் யஞ்ஞபுருடனாகிய விட்டுணுவைப்பூசிக்கச்செய்யவேண்டும்" என்று மற்றோரிடம் அவ்விருத்தமனுவே கூறியிருப்பதைக்காண்க. வைகானச கிரக்யத்தில் "அக்கினியில் நித்திய ஹோமம் முடித்தபொழுது பகவதாராதனம் செய்யவேண்டும்" என்றும் "நித்தியம், கிரகத்திலாவது தேவாலயத்திலாவது பத்தியுடன் நாராயணனைப் பூசித்தல் வேண்டும்" என்றும் "சமஸ்த கருமங்களும் அதனால் பூர்த்தியடையும்; இது வேதத்தாற்சொல்லப்பட்டது" என்றுமிருக்கின்றன. வைகானச சாஸ்திரம் சிரேஷ்டமென்பதைப்பற்றிச் சிந்தாமணிதத்திற் காண்க. போதாயன கிரக்யத்தில் "தேவதைகளைப் பூசிக்குமிடம் த்ரீணி வஷாவீவக்ஷ ... யம் ... இம்மந்திரங்களால்" என்று தொடங்கி ஸ்ரீமந்நாராயணனது திருவாராதனத்தைப்பற்றியும் ஸ்ரீ பரமசிவனது திருவாராதனத்தைப்பற்றியும் எடுத்துத் தெளிவாய் பிம்பாராதனம் கூறப்பட்டிருக்கிறது; மீண்டும் இவ்விஷயத்தைப்பற்றி விரிவாய் வரும். (மொழி பெயர்ப்பு)

இலத்தூர் சுந்தரராஜசாஸ்திரி

ब्रह्मविद्या.

[illegible]

जन्मान्तरम्

[अनुवर्त्यते]

अथ द्वितीयः प्रश्नः समाधीयते.

संक्षिप्तप्रश्नवाक्यम्. "आत्मा न कश्चिच्छरी- [illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா.

ஈசம்பரம்:--1888ஞு ஜனவரி 31-உ செவ்வாய்க்கிழமை

மறுபிறப்பு

[முன்தொடர்பு]

இரண்டாவதுகேள்வியைஎடுத்து விடைபகர்ந்து மதிப்பாம் இஃதல்லவோ இரண்டாவது கேள்வி; "ஆன்மாவென்பது சரீரத்தின் வேறான பொருளல்ல; அறியுந்தன்மை மூளையினதே; இவ்விதங் கேட்பவரின் கருத்து இதுவே யாம் ஐம்புலன்களால் அறியக்கூடிய இச்சரீரத்தின் வேறாக ஆன்மாவென்றும் பொருள் ஒன்றிருப்பின், அதற்கு மறுபிறப்பு ஒன்றுண்டென்று சொல்லக்கூடும். அஃதிருப்பதே முதலிற் சந்தேகம்; இனி அதிலைக்கொண்டேனும் அவ்வான்மாவை ஊகிப்போமானால் அதுவும் பொருந்தாது. பலகாரணங்களால் அறியுந்தன்மை மூளையினதே என்று புலப்படுகின்றது. ஆன்மாவிருத்தலே பெய்யாதலாலும், சரீரம் எமக்குமேலோ அழிந்துபோவதாலும், ஆன்மாவுக்கேனும் சரீரத்திற்கேனும் மறுபிறப்பென்பது எவ்வாற்றானும் அமையாதென்பதே. இதற்குச்சமாதானம்:—

யாம் முன்னரே பற்பல காரணங்களைக்காட்டி, சரீரத்தின் ஓர் பாகமாகிய மூளையென்பதற்கு அறியுந்தன்மை யுண்டென்னும் விஷயத்தை மறுத்திருக்கின்றோம். மறுபிறப்பென்பது உயிருக்கேயன்றி, உடலுக்கல்லவென்றும் காட்டினோம். ஆதலால், இக்கேள்வியைப்பற்றி இங்கு விடையளிப்பது அவ்வளவு அவசியமில்லை. முன் யாமெழுதிய பற்பலவற்றுக்கு இதற்கென மீண்டுமெழுதுவதும் அநாவசியகமே. ஆயினும் அங்கு எடுத்தோததாசிலகாரணங்களை இங்கு நீட்டிக்காட்டுவோம் சரீரத்தின் வேறாய ஆன்மாவென்றோர் பொருள் இருப்பதால் முன் பூதாவேசங்களிலும் (Somnamblism) மற்றுஞ்சில விடங்களிலும் தனது சரீரத்தையே முற்றிலும் மறந்துவிடும்படி நேரிடுகிறது. யோகிகள் சமாதி காலத்திலும் தன்னை மறந்து தனது மெய்யிற்றாக்கும் சீதோஷ்ணங்களை அறியாதிருக்க யாம் காண்கின்றோம்; மற்சுழுத்தியிலும் [அதாவது மெய்மறந்து நித்திரைசெய்வதென்றுகருத்து] சரீரத்தை ஆன்மா முற்றிலும் மறந்திருக்கிறது. அக்காலத்தில் தன்னை மறவாதவான்மா சரீரத்தை மறந்ததாகப்புலப்படுவதுஎக்காரணத்தாலோவெனின், அதற்குக்காரணங்களிவை:— உலகத்தில் எச்சீவனும் படுத்துறங்குங்கால், தன்தலைமுதலிய அவயவங்கள் எப்புறம் நோக்கியிருக்கின்றனவெனவறியாது. ஓர் மனிதன் நித்திரைகாலத்தில் தன் கைகால் முதலிய அவயவங்கள் எத்திசையை நோக்கியிருந்தன என்றாவது, எவ்வமைப்புடனிருந்தன வென்றாவது, அல்லது எவ்விதமேனும் உண்மையிலிருந்தன வென்றாவது அறிந்து பிறகு விழித்து, அங்ஙியபொழுது, எமது சரீரம் இத்தகையையுளனி

[illegible]

லையிலிருந்ததெனச் சொல்பவர் ஒருவருமில்லை. எவனைக்கேட்பினும் "யான் சுகமாய் நித்திரைபோனேன்,, என்றுரைக்கின்றார்களேயன்றி வேறொன்றுமில்லையே! சரீரமே ஆன்மாவாயின், அக்காலத்தில் சரீரமிருத்தலால் அறிவுண்டாகவேண்டுமே? அக்காலத்தில் மூளையில்லையா? மூளைக்கும் மற்ற நாடிகளுக்குமுள்ள சம்பந்தமற்றதா? அங்ஙனம் சம்பந்தமிருப்பினும் சூடு குளிர்ச்சி, நாற்றம், சத்தமுதலியவைகளில்லையா? அவை அங்ஙனமிருக்க அறிவில்லாததற்குக் காரணம் யாதெனில், சரீரத்தின் வேறான ஆன்மாவென்னும்பொருள் ஞானக்கருவிகளாகிய புலன்களுடன் அணுகாது தனித்துநிற்கின்றதென்றே சொல்லவேண்டும். ஆதலாற்றான் சோர்ந்துபடுத்திருக்கும் ஓர் மனிதனிடத்தில் 'நேற்றிரவு நல்லகாற்று வீசிற்றென்றால், அதற்கவன் தான் நித்திரை செய்ததாகவும் தனக்கொன்றுந்தெரியாதென்றும் சொல்லுகிறான். உதயமுதல் அஸ்தமனம் வரையில் உழைத்துவந்தமூளை அக்காலத்தில் ஓய்ந்திருக்கின்றதாகக் கூறுவதும் அமையாது. அம்மூளையிற்சம்பந்திக்கும் நரம்புகளும வெளிவஸ்துக்களுடன் கலந்த மாத்திரத்தில் அசைவதும, அவ்வசைவு தாக்கியவுடன் மூளையிலுண்டாகும் பிரகாசமாத்திரமல்லவோ அறிவு; இவ்வித அறிவு அக்காலத்திலில்லை என்பது எவ்விதச் சோதனையாலும் பொருந்தாததல்லவா? பற்றோர் பொருள் தம்முட் தாக்கின், அசைவது நாடிகளினியற்கை. தந்திக்கம்பிகளை யாம் தொடுங்கால் அவைகள் நடுங்கவில்லையா? அந்நாடிகள் தாக்கினும், மூளை பிரகாசியாதென்பது இயற்கைவிரோதமாதலால் அதுகொள்ளற்பாலதன்று. அம்மூளைக்கு அக்காலம் ரத்த சம்பந்தமில்லையென்பதுமுசிதமல்ல. நித்திரைகாலத்தில், பேசுதல் முதலிய யாதொருவியாபாரமுமில்லாமையால், சுவாசங்களிடையூறின்றி வெளிவருகின்றன ஆதலால் எமது ஹிருதயமலர் மலரவும் சுருங்கவும் யாதுந் தடையிலது. அதுகொண்டு இரத்தப் பிரவாகம் கிரமமாய் அக்காலத்தில் ஓடிவருவதற்குத் தடையிலது. அக்காலத்தில் நாடிகளுடன் வெளிவஸ்துக்கள் சம்பந்திக்கின்றன மூளையோபிரகாசிக்கின்றது; ஹிருதயமும் மலர்ந்துஞ்சுருங்கியும் வருகின்றது; இரத்தமும ஓடுகின்றது; இவ்விதமிருக்க சரீரத்தில் அறிவில்லை எனின், சரீரத்திற்கு அறியுந்தன்மை எவ்விதஞ்சித்திக்கும்? உதயமுதல் இந்திரியங்களுடன் சேர்ந்து வேலைசெய்துவந்த ஆன்மாவென்னுமோர்பொருள் இந்திரியங்களுடன் சம்பந்தியாது அக்காலம் நின்றதாகச் சொல்வதே ஞாயமெனக்கொள்க. அவ்வான்மா சரீரத்தின்வேறாய் எமது கண்ணிற்குப்புலப்படாமல் ஓர் அணுருபமாகவிருத்தல் வேண்டும். அணுவாயுள்ளது எக்காலமுமழியாது; அதுவொருடலைவிட்டுமிராது. அங்ஙனமிவ்வுடலைவிடினும் மற்றோருடலைக்கொண்டேவிருக்குமென்க. மூன்றாவது விஷயத்தைப் பற்றி விசாரிப்பாம். உலகத்தில் யாம்காணும் சிருட்டியின் வேறுபாடே மறுபிறப்புண்டென்பதற்குக் காரணமாகலாமென்றும் ஆத்திகர் கூறமறுக்கவெழுந்த விஷயம் இது:— உலகம் பலமாதிரியாவதும், தேசம், காலம், ஆகாரம் இவற்றின் வேறுபாட்டாற்றான் என்பது. இவ்வாக்கியத்தின் கருத்துஇது, உலகத்தில் தேசவேறுபாட்டால் ஜனங்களின் வேறுபாட்டைக்கூ

[illegible]

ண்கின்றோம். உதாரணமாக:— மேற்றிசையிற் பிறந்தவர்கள் வெண்ணிறமும், வடதேசத்திற் பிறந்தவர்கள் சிகப்புநிறமும், தென்னாட்டிற்பிறந்தவர்கள் கருத்தநிறமுள்ளவர்களாயிருக்க யாம் காண்கின்றோமல்லவா? அவ்விதமே தென்னாட்டார் அதிகவுயரமும் குட்டையுமில்லாமலும், அரபிமுதலியதேசத்தார் மிகவுயர்ந்தும், துரிக்கிதேசத்தவர்களும் அவ்விதமும், லாப்லாண்டுதேசத்தார்கள் மிகக குட்டையாயும், நப்தி என்னும் நதிக்கரையிலுள்ளவர்கள் கன்னிறமு முள்ளவர்களாயுமிருக்கின்றார்களல்லவா? காலத்தாலுமிவ்வித வேறுபாடு உண்டாகும். பாருங்கள்! மாரி காலங்களிலும், பனிக்காலங்களிலும் இரத்தம் குறைந்து வேகம் குன்றி சோம்பல் முதலியவை உண்டாகின்றது. பின்பனிப்பருவத்திலும் வெப்பகாலங்களிலும் தேகத்திற்கு ஊக்க முண்டாகின்றது. அதிகவெப்பு காலத்தில் சரீரத்தில ஓய்வுண்டாகின்றது; அவ்விதம் பாத்திரபேதத்தாலும் (அதாவது பெற்றோர் வேற்றுமையாலென்பதுகருத்து) உலகத்தில வேற்றுமையுண்டாவதுண்டு. பெரும்பான்மையில் கறுப்புநிறமுள்ளதாய் அங்கங்கொண்ட புத்திரனையும வெண்ணிறமமைந்ததாய் அதேநிறங்கொண்ட மகளையும, உரோகமுள்ள ஒருபெண் அவ்வியாதி சம்பந்தமுள்ள பிள்ளைகளையும பெறுதலைப்பார்க்கிறோமல்லவா? இனி ஆகாரபேதத்தாலும் அவ்விதம் ஏற்படலாம். உலகத்தில் மாமிசமுதலிய ஆகாரங்களை உட்கொள்வோன்சிசு பலமாகவும்; மற்றது பலவீனமாயிருப்பதைக் காண்கின்றோம். இத்தேசகால பாத்திரர்காரங்கள் பலவேற்றுமைகளைப் பெற்றிருப்பதால் அதன்காரணங்களான சரீரங்களும் பல வேற்றுமைகளைப் பெறுகின்றன என்பது. இதற்குச் சமாதானம்; உலகத்தில் ஜனமத்தில் வேறுபட்டால் பலவகைச் சிருட்டி உண்டாகின்றதெனக்கூறும் வாதிகள், அதற்கு நிறமுதலியவற்றையே காரணமாகக் கொண்டவர்களல்ல. வேறுயாதெனின், ஒருவன் பிறப்பினாற்றானே குருடனும், மற்றவன் மூடவனும், ஒருவன் தெளிந்தபுத்தியுடையவனும், மற்றொருவன் மந்தனுமாகின்றான். ஒருவனுக்குக் கற்பிப்பினும வராது; மற்றொருவன் தானேயறிவான்; ஒருவன் செல்வத்திற் பிறந்து செருக்கடைவான்; மற்றொருவன் செருக்கிற் பிறந்து செல்வனுவான்; ஒருவன் அரசன்; மற்றொருவன் வேலையாள்; இவையெல்லாமவனவன் புத்திக்கித்தக்கபடி. என்று கூறுவது அமையாது. படித்த ஒருவன் எடுத்தமுயற்சி கைகூடாது கட்டமடையவும் படிப்பில்லாவொருவன் எடுத்தமுயற்சி கைகூடிவரவும் கண்டோமில்லையா? இதற்குதாரணமாக இஃதொன்றையேகாணலாம். ஓ நாத்திகர்களே!! நீவிர் புத்திமான்களாக எண்ணியிருக்கும் உம்மைச்சேர்ந்தவர்கள் உலகசிருட்டிவக்கிஇதுகாறும் அரசர்பதவியை யடைந்தார்களில்லையே? அரசாண்டவர்களெல்லோரும் ஆத்திகர்களல்லவோ? உலகத்தில் கொண்டியான பெண்ணிற்கு கொண்டியாகவே பிறப்பான் என்றும், செவிடிக்குச் செவிடனே பிறப்பான் என்றும் ஏதாகிலும வரம்புண்டா? அப்படிக்கில்லையே; ஆதலால் அவ்விதம்பிறப்பது மறுபிறப்பைக் குறிக்கும் குறியே. இனி உன் மதத்தில் ஊமை, செவிடு முதலிய அங்கவீனர் பிறப்பதற்

[illegible]

[illegible]

[illegible]

காரணம் தக்கது யாதுமிலையே? தாயின் கருப்பையின் [illegible]ளர்படையே காரணமெனினும், அதேகருப்பையில பற்றேருகுழந்தை அவயவங்கள் அமையப்பெற்றிருப்பதால் அதுவும் பொருந்தாது. இனி உலகத்தில் ஓர் தாய்க்குச் செவிடர்களே பிறப்பாகளென்றாவது அல்லது குருடர்களே பிறப்பார்களென்றாவது நியமமுண்டா? அவ்வக்காலத்து வாதபித்தங்களின் மாறுபாட்டிற்கியைய கருப்பையுமாறுபாடடைந்து உடற்குலவிதக்குழந்தைகள் உண்டாகக்கூடுமெனினும், இடைவிடாது பிணமறுத்து உண்மையறியப்புகுந்த நம்மவரும் அறியாத விஷயமல்லவோ இது. கருவென்பது கருமானகைக் கொண்ட குகை போன்றதல்லவே? அங்ஙனமாயின், அவ்வமைப்பு அதினுட்பொருளிலும் தோன்றல் சித்திக்கும். கர்ப்பத்தில் புசித்த ஆகாரத்தின் வேற்றுமையால் பிறந்த குழந்தை மந்தனாகவிருந்தாலும் அது யுக்திக்கொவ்வாது. சரியான ஆகாரமுள்ளவர்களுக்கு ஜடனான பிள்ளையும் கெட்ட ஆகாரமுள்ளவர்களுக்கு புத்தி கூர்மையுள்ள பிள்ளைகளையுங்காணகின்றோம். ஆதலால், இத் தேசகால வேற்றுமைகள் சரீரத்தைப்பற்றி நிற்குமேயன்றி ஆன்மாவைப் பற்றாதென்றறிக. சிருட்டிகளின வேற்றுமையும் மறுபிறப்புண்டென்பதற்கு முக்கியகாரணம். தேசகாலபாத்திரங்களின் வேற்றுமைகளும் சரீரவேற்றுமைக்குக் காரணமாதல்கூடும். இவ்வுலகம் அநாதியான அனுபூதிகளிலமையுமெனக்கூறும் நம்மவர் மதத்தில் உலகத்திலுள்ள எல்லாமனிதர்களும் முகத்தில் வேற்றுமையடைந்து நிற்றல் எக்காரணம்பற்றி? உலகத்தில் நரர்களும், மிருகங்கள், பட்சிகள் முதலிய அநேகஜந்துக்கள் ஓரேயாதரியாயிருப்பதை யாம காண்கின்றோம். இம்மனிதர்கள்மட்டில் ஒவ்வொருவரு முகவேற்றுமை யுற்றிருப்பது குறிப்பாக அவரவர் சுவரூபத்தையறிந்து விதிவிலக்குகளை யநுஷ்டித்தல்வேண்டுமென்று எண்ணியேதோ பரமனது செயலாலமைந்திருக்கவேண்டும். இதைப்பற்றி விரிவாய், யாம்கடவுளைப்பற்றி எழுதுமுபந்யாசத்திற்காணலாம்.

(வரும்)

சம்ஸ்கிருத பாஷை

இராமாயணம்

(முன் தொடர்பு)

இவ்விராமாயணம் பூகோளமறியாதவர் எழுதியதாக மேற்றிசையாருட் சிலர் வரைந்ததைப்பற்றி முன்னெழுதி அவர் துர்வாதத்தை மறுத்தோமல்லவா? இனி தற்காலத்தவர் கண்டுபிடித்தபடி பூகோளமும் அதே புத்தகத்திலிருப்பதாக எடுத்துக்காட்டுவாம். அவ்விராமாயணம் கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்றிசைகளிலும் வானரங்களையனுப்பி சுக்ரீவனளித்த வுபதேசம் நான்கு சுவர்க்கங்களாற் சொல்லப்பட்டிருக்கின்றது. அதில் ஏனையபுராணங்களிலுள்ளதுபோல இப்பூமியினமைப்பு எடுத்துக் கூறப்படவில்லை. தேசங்களின் பெயர்களும், அ

[illegible] (Caucasas) [illegible] (Africa) [illegible] (Wales) [illegible] (Avan) [illegible]

வைகளினிலக்கணங்களும் அநேகமாய் தற்காலத்தவர் கண்டுபிடித்து வழங்கும் வழியையே அநுசரித்திருக்கின்றன. இவ்வாசியா கண்டத்தில் மாத்திரம் முற்றிலும் ஒத்திருப்பதாகவே சொல்லலாம். சிலவிடத்தில் பெயர்கள் மாறியும், அமைப்பு வேறுபட்டுமிருத்தலால், இலக்கணங்களை யூகிக்கவேண்டியிருக்கிறது. காலத்தாலிவ்வித வேறுபாடு சம்பவிப்பது எல்லோருமறிந்தவிஷயமே. காகுளம் என்றோர் பாகம் மேற்றிசையிற் சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்குப்பிறகு ஓர் பெரும்பாலைவனமிருப்பதாகவும்வெளியாகின்றது. அஃதை யூகித்தப்பார்க்கின் முன்சொல்லியது தற்காலத்தவர்சொல்லும் (Caucasas) காகஸஸ் என்கிற விடமென்றும், பின் சொல்லியது அதன் தென்மேற்கு மூலையிலுள்ள (Africa) ஆப்ரிகாதேசமென்றும் நினைக்கலாம். மேற்றிசையி னிறுதியிலுள்ள பட்டணங்கள், தேசங்கள், நதிகள் முதலியவைகளைக் குறிக்குமிடத்திலோர் சுலோகமிருக்கின்றது. "[illegible]" என்பது இந்த சுலோகத்தில் அவந்தி என எடுத்துக்காட்டியது இப்பாரதகண்டத்திலுள்ள உஜ்ஜயினீ (Oogeen) என்னும்பட்டணத்தையோவெனின், அஃதமையாது. இப்பாரத கண்டத்தின் கண்ணுள்ள பட்டணங்களைக்கூறுமிடத்து அது வேறாக்கூறப்பட்டிருக்கின்றது. மேற்றிசையினிறுதியிலதைக் கூறவதும் எவ்வாற்றானுமமையாதெனக. ஆதலால், அவ் அவந்தி என்பது வேறென்றே கொள்ளற்பாலது. அச் சுலோகத்திற்கு நாம் யூகிக்கும் பொருளிது:— அதற்கு முன் சுலோகத்தில் 'வேலாதடம்,' என்று ஓர் தேசம் குறிக்கப்பட்டிருக்கின்றது. அவ்விடப்பெயருடையதேசம் மேற்றிசையினிறுதியிலுண்டென்றும் அதை தற்காலத்தவர் வேல்ஸ் (Wales) என்றும் வழங்குவார்கள். நம் முன்னோர்கள் சிந்து நதியின் முகத்துவாரமுதல் தென் குமரிவரையுமுள்ள மேற்கடற்கரையை வேலா என்று வழங்குவதுமுளதேல், இங்கு "வேலா" என்றெடுத்தோதியது பொருந்தாது. பால்லீகம் முதலியதேசங்களின் மேற்றிசையில்கணக்கிடப்பட்ட இவ்வேலா என்பதுஅதுவென ஒவ்வாதென்றுணர்க. இனிமருசீ பட்டணமென்பது வேல்ஸ் தேசத்திலுள்ளமருசீ பட்டணமேயாகலாம். அதை தற்காலத்துப் பூகோளசாஸ்திரிகளும்புராதன பட்டணமென்கிறார்கள். ஜடிபுரமென்பது ஜடி என்னுமோர் செடியின் இருப்பிடமான ஓர் ஊரென்று பொருள்தருகின்றது. மேற்றிசையில் யாம் குறித்த தேசத்தவரும் முன் ஓர் மரத்தைவைத்து தெய்வமெனக் கும்பிட்டுவந்தார்களென்று சரித்திரங்களாலறிகிறோம். "அவந்தி,, என்பதசப்படாவிடினும் ஓ என்னுஞ் சொல்கெட்டு அவான் என்று தற்காலத்தவர் வழங்கும் ஓர்நதியிருக்கின்றது. "அங்கலோடான்" என்பதும் அவ்விதப்பெயருள்ள ஓர் ஜாதியார் குடியிருந்த மற்றொரு தேசத்தின்பெயரோ. தற்காலத்தவரும் இப்பொழுதுள்ள அங்கிலேயர்களுக்கு முன்னோர் ஆங்கிளிஸ் என்கிறவோர் ஜாதியாரென்றும் சரித்திரங்களில் எழுதியிருக்கிறார்கள் இவ்விஷயத்தில் வரும் சில ஆசங்கைகளை எடுத்து நீக்கிப்பிறகு சித்ததேச விஷயமாக சிறிதெடுத்துரைப்பாம். ஸ்ரீ இராமாயணம் பிரணவார்த்தத்தைக் காட்டுங் கருவியென்பது பிறகு வரும்.

[illegible]

குறிப்பு

ஓர் நண்பர் என்று கைபொப்பமிட்ட கடிதம் இம்முறை இடமில்லாததால் மறுதடவை பிரசுரிக்கப்படும்.

கடிதம்

(கடிதர்களபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் பாத்தியரல்லர்)

பத்திராதிபர் முதலிய பண்டிதர்கட்கு விஞ்ஞாபனம்.

வேதமூர்த்திகளுக்கு வந்தனம். ஐயன்மீர்! உட்சேர் திருத்தமான விஷயங்கள் பலவிருக்கினும் இரண்டுவிஷயங்களை எளியேன் சிந்திக்கின்றேன்; நமது வேதசாஸ்திரங்களில் பிராமணன் முதலிய நான்குஜாதி யுண்டென்று கூறுகிறது. பிராமணராகிய ஓர்ஜாதியில அனந்தம உட்பிரிவுண்டாகி ஒருவருக்கொருவர் கொள்ளல் கொடுத்தல்களிலும் பந்திபோஜனத்திலும் வேறுபட்டொழுகக் காரணமென்னை? உண்மதபேதங்களால் அங்ஙனமாயிற்றெனின், அதுபொருந்துமாறெங்ஙனம்? ஒவ்வொருவரும் தத்தம் மதமே யுயர்ந்ததெனக் கூறுவதால் எல்லாம் சமமெனக்கொள்ளவேண்டிவரும். அப்படியன்றி உயர்ந்தது தாழ்ந்ததுண்டென்று கொண்டாலும், அதுபற்றிப் பந்திபோஜன முதலியவைகளுக்கென்ன தடை? ஒவ்வொரு மதஸ்தரும் பிறக்கும்போதே தம்மதவுணர்ச்சி யுள்ளவர்களாயிருப்பார்களா? அவரவர் கல்வியறிவின் வளர்ச்சிக்குத்தக்கபடியன்றோ மதவுணர்ச்சியுண்டாகும்; அத்வைதமதஸ்தனொருவனுக்குப் பிறந்தபிள்ளை பிறந்தவுடனே தம்மதவுண்மை தெரிந்திருப்பதுபற்றி அத்தகப்பன் பிள்ளையை நாஸ்திகனென்றிகழ்ந்து பந்தியைவிட்டொதுக்குவானா? இனி ஆசாரபேதங்களால் உயர்வுதாழ்வுண்டாகி பந்திபோஜனம் வகைமாறு பிரிபட்டதெனின் அதுவும் பொருந்தவில்லையே! ஆசாரபேதங்களும் கல்வியறிவுக்குத்தக்கபடியன்றோ ஏறியுங்குறைந்துமிருக்கும்? நேற்றைதினம் எந்த ஆசாரத்தை உயர்ந்ததென்று நம்பியிருந்தோமோ அதேயாசாரம் இன்று விசாரிப்பில் தாழ்ந்ததென்று தெரிந்தால் உடனே அதைவிட்டு உயர்ந்ததைக்கைக்கொள்வோமன்றோ? ஒருமதஸ்தர் அல்லது ஒருபிரிவார் யாவரும் சதாசாரமுடையவர்களாயும் மற்றொருவகுப்பார் யாவரும் அநாசாரமுடையவர்களாயும் இருப்பார்களா? தங்களையாசாரத்திலுயர்ந்தவர்களென்று நினைக்கிற ஒருகூட்டத்தாரில் அநாசாரமுடையார் ஒருவரேனுமிருக்கமாட்டார்களா? இனிக்கல்வியறிவுகளின் ஏற்றத்தாழ்வுகளே அப்பிரிவினைக்குக் காரணமாகுமெனின் அதுவும்பொருந்தா. மகா பண்டிதனுடைய புத்திரனொருவன் கிட்சா குட்கியாயிரு

[illegible]

ந்தால் அவனைப் பந்தியைவிட்டு நீக்கிவிடுவார்களா? பாமரன் பெண்ணைப் பண்டிதனொருவன் மணக்காது விடுவானா? இனி வழக்கமே அப்பிரிவுகளுக்குக் காரணமெனின் அதுவும் பொருந்தா வழக்கமென்பது ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொருவரால் அநுஷ்டித்துக் காட்டப்பட்டது தானே பின்னொருகாலத்திற் பின்னொருவரால் அதுமாறி வேறொருவித அனுட்டானம் உருவதிற்றடை என்னை? எவ்வாறு சிந்திக்கினும், கொள்ளல் கொடுத்தல் உண்ணல் முதலியவைகளிலே நம்மவர் வேறுபட்டு அனந்தப்பிரிவாய் நீடிப்பதற்குக்காரணம் என் சிற்றறிவிற்கெட்டவில்லை. அப்படியேதேனும் சரியான காரணங்களுண்டாயிருந்தால் சத்திய ஸ்வரூபிகளாகிய பெரியோர் அவைகளைவெளிப்படுத்தி விளக்க வேண்டுகிறேன். இல்லையெனும் பட்சத்தில் நம்தேயத்துப் பண்டிதர் பலரும் ஒருங்கப்பட்டு வெளிவந்து இந்த வீண் பிரிவினையைப் போக்கி திரிமதஸ்தராகிய வைதிகர் யாரும் கொள்ளல் கொடுத்தல் உண்ணல் முதலியவைகளிற் கலந்தொழுகும்படி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அதனால் நம்தேசத்தில் பற்பல நன்மைகள் விளைவதாகும். அதை இங்கு விவகரிக்க இடம்போதாது. பண்டிதர் தாமே சிந்தித்துணர்வர். எங்ஙனமாவது சத்தியத்தைக் கண்டுபிடிக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய முக்கிய நோக்கம்! இந்த உட்பிரிவினைகளால் நம்தேசத்தில் நேர்ந்ததும் நேருவதுமாகிய சங்கடங்கள் பலவுள; இங்கே விவகரிக்க இடம்போதாது. கனவான்களே! பண்டிதர்களே! தேசோபகாரிகளே! மௌனமாயிராமல் இதற்குவிடைதருவீர்களாக. விஷயம் இரண்டில் மற்றொன்றைப் பின்னர் வெளியிடுவேன். வந்தனம்

ஓர் அந்தணர்

[illegible]

௪௧- [illegible]

௪௨- [illegible]

௪௩- [illegible]

௪௪- [illegible]

௪௫- [illegible]

௪௬- [illegible]

௪௭- [illegible]

௪௮- [illegible]

௪௯- [illegible]

௫௰- [illegible]

௫௧- [illegible]

௫௨- [illegible]

௫௩- [illegible]

௫௪- [illegible]

௫௫- [illegible]

பாலநீதி

(முன்தொடர்பு)

௪௧ சுருதிவாக்கியம் சுகத்துக்குயோக்கியம்.

௪௨ சூனியனானவன் ஞானசூனியன.

௪௩ செய்வதைத்திருந்தச் செய்வதுதகுதி.

௪௪ சோரச்சேர்க்கை சேதமவிளைக்கும்.

௪௫ சைத்தியங்கொள்ளச் சற்றுமிடங்கொடேல்.

௪௬ சொற்கேளாதவன் சுகங்கெட்டலைவன்.

௪௭ சோதித்தறிந்து போதிக்கத்தொடங்கு.

௪௮ சௌபாக்கியத்திலும் சன்மார்க்கம் நலம்.

௪௯ ஞானமில்லையோ மானமுமில்லை.

௫௰ தன்சம்பாத்தியம் தனக்குச்சலாக்கியம்.

௫௧ தாய்தந்தைக்குத் தணிந்துபணிசெய்.

௫௨ திருந்தாமனிதன் இருந்தென்னபலன்.

௫௩ தீச்சுட்டதனிலும் தீச்சொற்சுடாம்.

௫௪ துர்க்கட்சிசொல்வது துஷ்டருக்குரியது.

௫௫ துக்கத்திற்பிரியம் ஊக்கத்துக்குலயம்.

[illegible]

மதவிஷயமான ஓர் விநோத சம்பாஷணை

ப்ரம்மஸ்ரீ வேதமூர்த்திகாள்!! இச்சம்பாஷணை பல ஜனங்கள்சூழ நிகழ்ந்ததாகையால் தங்கள்பத்திரிகையிற் பிரகாசிப்பிக்க வேண்டுகிறேன். யான் 3—7—88-ல் பல்லடந்தாலூகா திருப்பூரில் சு-சாமிசெட்டியார் சத்திரத்தில் தங்கினேன்; ஜமாபந்திக்காக கலெக்டர்வர்களும் தாசில்தாரும் அங்குக்கச்சேரிநடத்தினர்கள். அக்கூட்டத்துள் சத்தியமங்கலமிருந்து ஓர் கிறிஸ்தவப்பண்டிதரும் வந்திருந்தார்; யான் ஒருவைஷ்ணவருடன் மதவிஷயமாய் நெடுநேரம் சம்பாஷிப்பதைக் கேட்டிருந்த அக்கிறிஸ்தவர் என்னருகில்வந்து ஐயா! நீங்கள் உங்கள் மதநூல்களிலே பயிற்சியுடையவராகக் காணுகிறது; எங்கள் சத்தியவேதத்தையும் படித்திருப்பீர்களே என்றார். ஆமென்றேன்; மேல் நிகழ்ந்த வினுவிடைகளிவை:—

கிறிஸ்தவர். அதை நீங்கள் அங்கீகரித்தீர்களா?

யான் இல்லை.

கி; ஏன்?

யா; அது முன்னுக்குப்பின் முரணக்கூறுவதும், யுக்தியனுபவத்திற்குப் பொருந்தாததும, தத்துவங்களை விளக்காததும், தர்க்கத்திற்கிசையாததும், கட்டுக்கதையாயிருப்பதுமாயிருத்தல்கண்டுதான்.

கி; அந்தக்குற்றங்களிற் சிலவற்றைச் சொல்லும்பார்ப்போம்.

யா; உங்கள வேதத்தின் முதல் வாக்கியத்தைச் சொல்லும்?

கி; ‘ஆதியிலே தேவன் பூமியையும் வானத்தையும் படைத்தார்’’

யா; நில்லும்; வானத்தையும் பூமியையும் எதிலிருந்துபடைத்தார்?

கி; அவைகளை உண்டாகும்படி நினைத்தார்; அப்படியே உண்டாயிற்று.

யா; நினைப்பும் மறப்புமாகிய குணங்களுள்ளவரை ஜீவகோடிகளிற்சேர்க்காமற் கடவுளென்றுகூறுதல் குற்றமாம்-இருக்கட்டும்; வானமும் பூமியுமாகிய காரியத்துக்கு ஓர் காரணம் இருக்கவேண்டுமே அது யாது?

கி; சர்வவல்லமையுள்ள கடவுளுக்கும் ஒருகாரணம் வேண்டுமோ;

யா. கடவுள் சர்வவல்லவரென்பது யாமும் அறிந்ததுதான் இயற்கைவிரோதம் அமையுமோ இல்லாதது உண்டாதலும உள்ளது போதலும் எவ்வாறு?

கி; ஆனல் அவைகளைக்கடவுள் படைத்ததல்லவென்று கூறுகிறீரா?

யா; யான் அப்படிக்கூறவில்லை; அவைகள் படைக்கப்படுதற்கு முதற்காரணப்பொருள் (உபாதானம்)எதுவென்றன்றோ கேட்கின்றேன்?

கி; அது கடவுளுக்கே தெரியும்; அதைத்தெரிவிக்கவேண்டுமென்று கர்த்தரிடத்தே மன்றாடினுல் அவர் தெரிவிப்பார்.

யா; அப்படி மன்னுடித் தெரிந்துகொண்ட கிறிஸ்தவருள் யாரேனுமிருக்கிறார்களா?

கி; அனேகரிருக்கிறார்கள்.

யா; அவர்களைக் கொண்டாவது நீருமுணர்ந்து எமக்கும் உணர்த்தலாமே?

கி; ஆம், நீங்கள் எங்கள் மதத்திலே சேர்ந்துகொண்டால் பிறகு அறியலாம்.

யா; இது மூக்கறையன் கதையாயிருக்கிறதே! முதலில் அதிலுள்ள சந்தேகந்தீர்ந்து நம்பிக்கை வந்தாலல்லோ நான் அதில் சேரவிரும்புவேன்?

கி; இதுவெல்லாம் துராட்சேபமாம்; அப்படி ஆட்சேபிக்கவென்றால் உங்கள்மதத்திலே கோடி கோடி ஆட்சேபனைகளிருக்கிறதே, அவற்றிற்கெல்லாம் பதில்சொல்ல உம்மாலேதான்முடியுமா? எங்கள்மதம் சத்தியமானதென்று நம்பினவர்களுக்குத்தான்பயனளித்திக்கும்; நம்பாதவர்க்கு ஒன்றுமில்லை.

யா; சும்மா ஏனையா நமட்டிச்சொல்லுகிறீர்? எங்கள்மதத்திலே கோடி ஆட்சேபனை நீர் கண்டுபிடித்தது மெய்வதத்துக்கே வெளிச்சம்.

கி; ஆனால் நீரேசொல்லும், உலகத்துக்கு (உபாதானம்)முதற்காரணப்பொருள் எது?

யா; மாயை.

கி; மாயை யாராற்படைக்கப்பட்டது?

யா; அது படைக்கப்பட்டதன்று; அநாதியாயுள்ளது.

கி; அநாதியில் அது வருவானேன்?

யா; சபாசு நல்லகேள்விகேட்டீர்; கடவுளொருவருண்டென்று நீர் ஒப்புக்கொள்ளுகிறீரா?

கி; தடை என்ன?

யா; அக்கடவுள் எப்போதுபிறந்தவர்?

கி; அவர்பிறக்கவில்லை அநாதியாயிருக்கிறார்.

யா; அநாதியில் அவர்வருவானேன்?

கி; இதுவிதண்டாவாதமாம், அப்படிக்கேட்கக்கூடாது.

யா; ஏனையா நீர்கேட்டதைத் தானே யான் திருப்பிக்கேட்டேன்; நீர்கேட்ட கேள்விமட்டும் விதண்டாவாதமல்லவோ?

கி; வீண்வாதமென்னத்திற்கு ஆக்ஷேபனைகளெல்லாமதங்களிலுமுண்டு.

யா; உமதுகருத்தின்படி யெல்லாமதங்களும் ஆக்ஷேபமுள்ளதானால் உமது மதத்தார் எமது மதத்தைப் பழித்து எம்மவரை யெல்லாம் கிறிஸ்தவராக்கிக் கெடுப்பதேனோ? அது அக்கிரமமல்லவோ?

கி; நீரும் அப்படியே அவர்க்குப் போதித்து உம்மதத்திற் சேர்த்துக்கொள்ளுமேன் இஷ்டமுண்டானால்?

யா; ஆமையா. இது வழியிற்போகிறவனை ஒருதையுதைத்துவிட்டு அவன் ஏனடா உதைத்தாயென்றால், நீயும் என்னை ஒருதை யுதைத்துவிடு என்று சொல்லுகிற மூடன்கதையாய்முடிகிறதே. தான் கெட்டதுமன்றி சந்திரபவுஷணியையுங்கூடக் கெடுத்தது என்றபடி முடிந்ததே. இப்படிப் பயனற்ற செகையிற்காலம்போக்கவா இவ்வ

[torn]ான ஜன்மத்தை நாம் எடுத்தது?

கி; [torn] நீங்கள் மௌனமாயிருங்களேன்;

யா; இப்படி யன்னவுபதேசம், அவரவலிந்து வலிந்து அக்கிரமமாய் எம்மவரைக் கெடுப்பதும் நாம் மௌனமாயிருப்பதும் நீதியாமோ?

கி; அக்கிரமத்தை விசாரிக்கக் கர்த்தர் ஒருவரிருக்கிறார் நேரமாயிற்று வந்தனம்; போய்வருகிறேன். (நழுவினார்.)

பார்த்தீர்களா! இந்துக்களே!! இச்சம்பாஷணையின் விரோதத்தை, இவ்வாறு நழுவிவிட்ட கிறிஸ்தவப்பண்டிதர், வேறெவனுவது வாயில்லாதவன் அகப்பட்டிருந்தால் என்னென்ன ஜாலஞ்செய்து மயக்கியிருப்பார், சமயத்திற்குத்தக்க தந்திரங்கள்செய்து மனமறிந்தவஞ்சகராய்ச் சஞ்சரிக்கின்றார்கள்; இந்துக்களே! தக்கமுயற்சியெடுத்து நம்மவரைக்காருங்கள். வந்தனம்

சாமக்குளம்

வேங்கிடரமணதாஸ்.

ப்ரம்மவித்தியாபத்திராதிபரவர்கட்கு வந்தனம்.

இதை தங்கள் ப்ரம்மவித்தியாபத்திரிகையில் பிரசித்தஞ்செய்ய வேண்டிக்கொள்ளுகிறேன்.

ப்ரம்மவித்தியாவின் கையொப்பக் காரர்களாகிய மித்திரர்களே! இக்கலி முதிர்ந்த காலத்தில் அந்நியதேசத்திலிருந்து நம்தேசத்திற்கு வந்த பாதிரிகள், சுருதி ஸ்மிருதி புராணாதிகளுக்குச் சம்மந்தமான இந்து மதத்தைப் பலவாறாக தூஷித்து நமது இந்து மதத்தின சொரூபத்தையறியாத பாமர ஜனங்களை மயக்கிக் கிறிஸ்தவர்களாக்கிக் கொள்வது பலரும் அறிந்த விஷயமே. இக்காலத்தில் நமது பண்டிதர்கள் தாமறிந்தசுருதி யுக்தி அனுபவங்களைக் கொண்டு நமது மதமேன்மையைப்பற்றி உபந்யாசங்கள் செய்து பத்திரிகைகளில் பிரசுரம் செய்யவேண்டியவர்களாயிருக்க, உள் மத வாதங்களைப்பற்றி அடிக்கடி எழுதுவதினால் கலவரங்களுக்கிடமுண்டாகிறதுமன்றி நம்மை தூஷிக்கும் அன்னியர்களுக்கு சந்தோஷத்தையுமுண்டாக்குகின்றது.

முற்காலத்திலேயே அவதார புருடர்களால் சைவாதிஷண்மதங்களை சுருதியாதிப் பிரமாணங்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஷண்மதங்களும் ஒரே வஸ்துவை யடையும்பொருட்டு ஆறு மார்க்கங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறதென்பது பரமார்த்தக புத்தியுள்ள நம்மவர்களுக்குத் தெரிந்த விஷயமே. அந்தந்த மார்க்கத்தை யனுசரித்தவர்கள் அந்தந்த வழியாகவே பரம்பொருளை யடைகிறார்களென்பது நிச்சயம். ஆறுகோணமுள்ள சக்கரம் கீறி, அதநடுவில் பிரணவத்தை எழுதிவிட்டால் அப்பொழுது அச் சக்கரத்தைப் பார்ப்பின் ஆறு கோணங்களும் ஆறுமதங்களாகவும் நடுவிலுள்ள பிரணவம் பரம்பொருளாகவும் இருப்பதை யாவரும் சுலபமாகஅறியலாம். இப்பொழுது நம்மவர்களிற்சிலர் அன்னியதேசபாஷாப்பியாசிகளாய் நம்மதத்தின் சொரூபத்தையும் நமது சௌதஸ்மார்த்த சருமங்களையும் அறியாதவர்களாயிருப்பதால் அவர்களும் மற்றவர்களும் நமது ஆசாரவிஷயங்களை சுலபமாய் அறிந்துகொள்ளத்தகுந்த உபந்யாசத்தை பத்திரிகையில் பிரசித்தப்படுத்துவது அத்தியாவசியமுள்ளது.

நம்மதத்தை விருத்தி செய்ய ஏற்பட்ட நமது மடாதிபதிகள் யோகநித்திரையை நெடுநாளாய் சாதித்து வருவதால் அவர்கள் விழிப்பதற்குள் நம்மவர்கள் கதி என்னவாகுமோ தெரியவில்லை. இப்பொழுது நாம் மௌனமாயிருக்கக்கூடாது. சபைகள் கூடிப் பிரசங்கம் செய்யவேண்டும். நம்மதத்தினுண்மைகளை ஜனங்களுக்குப் போதிக்கவேண்டும்; நாம் சிலசமயங்களில தெருத்திண்ணைகளிலுட்கார்ந்து வேடிக்கைக்கதைகளைப் படிப்பதைவிட்டு நமது மதகிரந்தங்களைப் படித்து ஜனங்களுக்குப்போதிக்கவேண்டியது. ஒவ்வொரு சமயங்களில் வித்துவான்களால் பொதுஸ்தலங்களில் உபந்நியாசங்கள் நடத்திவைக்கவேண்டும். ஜாதிபேதங்களெண்ணாமல் இதரஜாதிகளுக்கும் போதிக்கவேண்டும். படித்தவர்கள்யாவரும் இதை ஒருகாரியமாகப்பாவித்து தேர், திருவிழா, சந்தை முதலானகூட்டங்களில் நமது மதத்தைப்பற்றிப் பேசவேண்டும். ஒவ்வொரு உத்தியோகஸ்தரும், வர்த்தகரும் வியவசாயக்காரரும், சுகவாசிகளும் சென்னை ஹி. டி. ஸொஸைடிக்கு மெம்பராகச்சேர்ந்து டிராகட்டுகளைத் தருவித்துப் பிரசித்தப்படுத்தவேண்டும். நம் முன்னோர்கள் நமது மதத்தைக் காப்பாற்றும்பொருட்டு எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார்கள். அதில் நூரிலொரு பங்கு மாத்திரம் நாம்பாடுபட்டால் போதும். ஆரிய மதாபிமானிகளே! பண்டிதர்களே!! சற்று இதவிஷயத்திற் கவலையெடுத்துக்கொண்டு உள்ளவாதங்களையொழித்து புறப் புறமதப்பைசாசங்களை நமது சாஸ்திரவிஞ்ஞைகளால் ஓட்டி நம்மவர்களைப் பாதுகாப்பீர்களாக; பரமன் இருபைபுரிவாராக; நமது மதம்வாழ்கக்கடவது; சகலஜனங்களுக்கும் சுபமுண்டாவதாக; பரமேசுரன் துணையிருப்பாராக.

குமாரபாளையம்
சுப்பிரமணிய சர்மா

நண்பர்கட்கோர் அறிவிப்பு

சென்ற இந்துஜனபூஷணியில் ஒருவர், சைவசித்தாந்தி எனக்கையொப்பஞ்சாத்தி தாதுமேலான அறிவுக்கெட்டியபடி ஏதேதே எழுதி அவ்வரும்பத்திரிகையை நிரப்பியிருக்கின்றார். இவர், எமக்கும் "ஞானமிர்த" பத்திராதிபருக்கும் நேர்ந்தவிவாதத்தில் யாதும் சம்பந்தப்படாதவரெனும், எம்மை தூஷிக்கவேண்டி அவர்சார்பாய் சிறிதுபேசினர். இவர் இந்துடிராக்ட் சங்கத்தைப்பற்றி எழுதியது தப்பென்றுயாம் காட்டியதற்கு சிலபோலிக்காரணங்களை எழுதி அதின்மாத்திரையில் தாம் ஜயித்ததாய் தம்முள்தாம் களிகூர்ந்தார். இவ்வாதியாருக்கு இவ்விதவுண்மதச்சண்டைகளால் சுல சவுகரியமிருப்பதால் இவ்விதம்எழுதிவரவேண்டும். பொதுநன்மையைநோக்கும் பத்திராதிபர்கள் இதைச்சட்டைசெய்தல் அநாவசியகம்; ஆதலாற்றான் அடி ஞானமிர்தக்காரரை இவர் எவ்வளவு தூஷித்திருப்பினும் அதைப்பற்றி அவர் சிறிதும் சிந்தித்தாரில்லை. யாமும் இதைப்பற்றிக் கவனித்தலனாவசியகம்; இவர் எவ்வளவவைதாலும் (விவாதஸ்யவிவாஹஸ்ய ஸமயோரேவ ஸோஹித) அசமான விவாத விவாகங்கள் அநுசிதங்களென விடுத்தோம்.

பத்திராதிபர்.

கடிதர்கவனிப்பு

I- கடிதக்காரர்கள் எழுதப்புகுந்த விஷயங்களை நல்லவெண்மையாகிய காகிதத்தின் ஓரோபுறத்தில் கறுத்தமசியுடன் வரிகள் ஒன்றுக்கொன்று நெருங்காமலும், அட்சரங்கள் தனித் தனியே புலப்படும்படி திருத்தமாயெழுதல்வேண்டும்.

2- படிப்பவர்களுக்கு அறிவையும் மகிழ்ச்சியையும் வியப்பையுந்தரத்தக்க நறபொருள்களையே அமைத்தெழுதல்வேண்டும்.

3- பயனில்லாத சொற்றொடர்களையும் சிந்தித்தல் நிறைந்த வாக்கியங்களையும் கடிதத்தில் எழுதலாகாது.

4- பொருள நன்றாய் விளக்கும்படி வாக்கியங்களை இயன்றமட்டும் சுருக்கி எழுதல்வேண்டும்.

5- கடிதக்காரர்கள் தத்தம் உண்மையான ஊர் பெயர் விலாசம் முதலியவைகளை பத்திரிகாசாரியருக்கு மாத்திரம் விளக்கும்படி கடிதத்தின் கீழ்புறத்தில் வரையவேண்டும்.

6- பத்திரிகையில் பிரசுரிக்கத் தகாததாககாணப்படுகிற கடிதங்கள், கடிதர்களுக்குத் திருப்பியனுப்பப்படா. காரணமுங்கிடைககாது; கடிதங்களிலுள்ள கடுஞ்சொற்களும் தீய்பொருள்களும் நீக்கப்படும். அந்தரங்க கடிதக்காரர் பெயர் எவ்விதத்திலுங் காக்கப்படும். கடிதர்களின் அபிப்பிராயங்கள் பத்திரிகாசிரியரைச் சாரபாட்டா.

கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு.

1887-ௐ மார்ச்சுமீ த்தில் சென்னை "வேதாந்த விசாரணசபையார்" உலகமும் ஆத்துமாவும் சத்தா? அசத்தா? சதசத்தா? என்னும் வினாக்களைச் சிறுபத்திர வாயிலாகக் கிறிஸ்தவரைக் கேட்டார்கள். அவ் வினாக்களுக்கு விடை பைபிலின்கண் ஆதாரமில்லாதிருந்தும் நான்கு கிறிஸ்தவர், தனித்தனியே பொருத்தமில்லாத விடையளித்தார்கள். அதனுபாசம் வெளிப்படும்பொருட்டும், உண்மையை யாவரும் உணர்தற்பொருட்டும் ஓர் சம்ஸ்கிருதபண்டிதர்" அவ்விடைகளைக் கண்டித்து, "கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு" என்னும் புத்தகமொன்று ஒன்பது பாரத்தில் அச்சிட்டிருக்கின்றார். சமய ஆராய்ச்சிசெய்யும் யாவரும் அதை வாங்கிவாசிக்கவேண்டியதே. விலையும் சொற்பம்; காகிதமோ உயர்ந்தது. வேண்டியவர், சென்னை முத்தியாலுப்பேட்டை தம்புசெட்டிவீதி 316-நெ. மதராஸ் ரிப்பன் பிரஸில் ம-௱-௱- ஸ்ரீசை. ர. நமசிவாயசெட்டியாரிடத்திலும், சிதம்பரம் ப்ரம்மவித்தியாபத்திராதிபர் ப்ரம்மஸ்ரீ கு. சீநிவாசசாஸ்திரியாரிடத்திலும் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை அணா 2. தபாற்கூலி பை 6.

இந்து டிராக்ட் ஸொஸைட்டி

இந்த இந்துசங்கம் கலியுகாதி சகூஅகூ வது சர்வஜித்துௐ சித்திரைமீ த்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

இச்சங்கத்தின் முக்கிய கருத்துகள்:—

(I) இந்துமதத்தைப் பரவச்செய்தல்; அதன்விரோதிகளை கண்டித்து அதைப் பாதுகாத்தல். (2) இந்து மகாஜனங்களுடைய யோகக்ஷேமத்திற்காகப் பாடுபடுதல். (3) நீதிமார்க்கங்களையும், கல்வி விஷயங்களையும் ஆதரித்து அபிவிருத்திசெய்தல்

சுதேசபாஷைகளிலும் இங்கிலீஷிலும் சிறு பத்திரிகை புத்தகம் இவற்றைப் பரவச்செய்தும், பகிரங்க உபந்யாசம் புரிவித்தும், வாதம் செய்வித்தும் மேற்படி கருத்துகள் நிறைவேற்றப்படும்.

இச்சங்கத்துக்கு வரு 1-இ சந்தா குறைந்தது ரூபா I—4—o
(இது முன்பணமாகக் கட்டவேண்டியது.)

அக்கிராசனாதிபதி:— ப்ரம்மஸ்ரீ, ம-ா-ா-ஸ்ரீ ஆர். சிவசங்கர. பண்டியா அவர்கள், பி-எ. எப்-டி-எஸ்

காரியதரிசி:—ப்ரம்ம ஸ்ரீ ம-ா-ா-ஸ்ரீ, தீ. வி. பெரியசாமி ஐயரவர்கள்

சுதேசமதாபிமானிகளான இந்துக்கள் யாவரும் இந்த மத சங்கத்திற்குத் திரவியசகாயம் செய்யப் பிரார்த்திக்கப்படுகின்றார்கள். இச்சங்கத்தில் சேர்ந்தவர்கள், சென்னை முத்தியாலுப்பேட்டை தம்புசெட்டிவீதியில் இந்துடிராக்ட்ஸொஸைட்டியின் காரியதரிசியவர்கள் பேருக்குத் தபால்சார்ஜுக்காக அரை அணாத் தலை அனுப்பினால், ஷை அக்கிராசனாதிபதி அவர்களாலியற்றப்பட்ட இந்துமத வினாவிடையென்னும் புத்தகத்தை இனாமாகப் பெறுவார்கள். இச் சங்கத்தைப்பற்றி இன்னும் யாதேனும் கேட்கவிரும்புவோர், காரியதரிசி அவர்களுக்கு எழுதிக்கொள்ளவேண்டியது.

பட்டஸ்ரீ நாராயணசாஸ்திரிகளியற்றிய
தண்டகங்களும் நாடகங்களும்

சூரமயூரநாடகம்-	o	6	0
ஜைத்திரஜைவாதிருகம்-	0	6	o
சர்மிஷ்டாவிஜயம்-	0	6	o
மகேசுவரதண்டகம்-	o	I	o
ஆரியாதண்டகம் லக்ஷுமிஸ்தோத்திரம்-	o	I	o
சாமருத்திரசம்ஹிதாபாஷ்யம்-	o	8	o

இஃது மகாமகோபாத்தியாய இராஜுசாஸ்திரிகளவர்களால்செய்யப்பட்டது.

சௌமியசோம நாடகம்-	o	5	e

இந்நாடகம் ப்ரம்மவித்தியா பத்திராதிபர் கு-ஸ்ரீநிவாசசாஸ்திரிகளா லியற்றப்பட்டது.

நீதிக்கீர்த்தனை.	o	1	6
விசாகதுலாபாரப்பிரபந்தம்.	o	1	6

போதாரியா—இது ஸ்ரீ மத் சங்கராசாரிய சுவாமிகளருளிச்செய்தவோர் வேதாந்தப்பிரகரணம். விலை அணா க.

முக்கலாரியா:—இது முக்கல பட்டரியற்றிய ஒருஇனியஇராமதோத்திரம். விலை அணா ௨-

நந்திகேசுவர காசிகா:—இது வியாகரணசாஸ்திர மூலசூத்திரங்களாய சச- சூத்திரங்களுக்குரை. விலை அணா க

ஆனமாவும் சரீரமும்:— இது நாஸ்த்திகர் சேழ்விகளுக்குவிடை. விலை அணா க-

ஸதாசிவபிரம்மாரியா / சிவமானசிகபூஜா	,,	,,	ரு
வரதராஜஸ்தவம்	,,	1	,,
கஸ்லவதபிரபந்தம்.	,,	9	,,
ஸ்ரீராமபத்திரவிஜயம்	,,	அ	,,
பிரஸன்னேத்தரராமாயணம்	,,	ரு	,
தோத்திர சங்கிரகம்	,,	உ	,,
இராமாயணவினாவிடை	,,	௩	,
சிதம்பரமாஹாத்மியம்	,,	அ	,,
துதிசங்கிரகம்	,,	க0	,,
விசாகநட்சத்திரமாலிகை	,,	,,	ரு,
சீகாழித்தலபுராணம்	,,	அ	,,
வேளூர்ப்புராணம்	,,	ரு	,,
கந்தபுராணநவநீதம்	,,	கஉ	,,
பஞ்சதசோபநிஷத்து	க	உ	,,
அஷ்டாங்கயோகம்	,,	ரு	,
மனுமுறைகண்டவாசகம்	,,	ச	,,
கிறிஸ்து மதகண்டனம்	,,	க	,,
யேசுக்கிறிஸ்து மனிதனே	,,	,,	ரு
நீதிநெறிவிளக்கவுரை	,,	ச	,
சிவோத்கருஷதீபிகை	,,	க	,
திருமுருகாற்றுப்படைக்கு உரையாளர் பரிமேலழகருரை	,,	உ	,,
திருத்தணிகை பதிற்றுப்பத்தந்தாதி	,,	க	,,
சதாசிவரூபம்	,,	உ	,,
நெஞ்சுவிடுதூது	,,	,,	ரு
உருத்திராக்கமாலை	,,	,,	,,

தபால்சார்ச்சு பிரத்தியேகம்

ப்ரம்மவித்தியா யந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்ட அப்பய்யதீக்ஷிதரவர்களுடைய கிரந்தங்களின் விளம்பரம்

	விலை.		
சிவதத்துவவிவேகம்	2	0	0
மத்வமதவித்வம்சனம்-	0	12	0
ப்ரம்மதர்க்கஸ்தவம்-	0	8	0
ஆதித்தியஸ்தோத்திரரத்தினம்-	0	4	0
சிவமஹிமகலிகாஸ்துதி-	0	7	0
சிவத்தியானபத்ததி-	0	1	0
இராமாயணதாற்பரியசங்கிரகம்-	0	2	o
பாரததாற்பரியசங்கிரகம்-	0	2	0
சித்தாந்தலேசசங்கிரகம்-	1	0	0
ஆத்மார்ப்பணஸ்துதி / மானஸோல்லாசம்	,,	,,	6

Printed anb Published for the Proprietor at the Brahmavidya Press Chidambaram.